பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. பள்ளிகளில் இலக்கணப் பாடம் வெறுக்கப்படுவதற்கான காரணங்களை அறிந்துரைக்க.

31. தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமையை எடுத்துரைக்க.

32. வினாத்தாள் தயாரிப்பு குறித்து விளக்குக.

33. மொழிப்பயிற்சி சிலவற்றைத் தெளிவுபட விளக்கியுரைக்க.

34. மாணவர்களைக் கவரும் விதமாகப்பாடம், நடத்தும் முறையைப் பற்றி விவரிக்க.

———————





# B.Lit., DEGREE EXAMINATION – JUNE 2006.

First Year

(For B.Lit., Students only admitted in AY 2005–06)

தமிழ் கற்பித்தல்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. தமிழைப் பரம்பொருளுக்கு உவமை கூறியவர் யார்?

2. பாடக் குறிப்பு எதைப் போன்றதாகும்?

3. பயிற்சி முறையினால் மக்களுக்கு எது வளர்ச்சியடைகிறது?

4. செயல் திட்ட முறையின் இருவகை யாவை?

5. மொழியைக் கற்கத் தொடங்குவதற்கு எத்திறன் அடிப்படையானது?

6. நாபிறழ் பயிற்சி என்றால் என்ன?

7. படிப்பைத் தொடங்குவதற்குப் பயன்படும் பருவம் எது?

8. கட்டப்பட்ட உறையைக் குறிக்கும் சொல் யாது?

9. உரைநடையில் தருக்க நடையாக அமைவது எது?

10. உணர்வுகளின் வடிகால் என்று எதனை அழைக்கலாம்?

11. இலக்கணம் படிப்பதால் எதனைத் தவிர்க்கலாம்?

12. மொழிப் பயிற்சியின் அடிப்படை நிலை யாது?

13. விடைக் குறிப்பு எவ்வாறு எழுதப்பட வேண்டும்?

14. அகராதிகளை எந்த நூலகத்தில் வைக்க வேண்டும்?

15. கற்பித்தல் கருவியை உருவாக்கியவர் யார்?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடை தருக.

16. கேட்கும் திறனின் மூன்று நிலைகள் யாவை?

17. வகுப்பு நூலகம் குறித்து எழுதுக.

18. படித்தலின் கூறுகள் யாவை?

19. மொழிகளுக்கிடையே அடையாளம் காணல் என்றால் என்ன?



20. ஆழ்ந்த படிப்பின் நோக்கங்களைக் கூறுக.

21. எழுத்துப் பயிற்சி குறித்து எழுதுக.

22. தமிழ் மொழியை முதலில் கற்பதால் ஏற்படும் பயன்கள் யாவை?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. மொழிப் பயிற்சி பற்றி விரித்துரைக்க.

24. படிப்பு முறைகளில் அகன்ற படிப்பு, ஆழ்ந்த படிப்பு பெறும் இடம் யாது?

25. 'அளவீடு' இன்னது என விளக்கியுரைக்க.

26. பாடத் திட்டத்திற்கும் கல்வித் திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.

27. பாடநூல்கள் குறித்து எழுதுக.

28. நல்ல தேர்வின் இன்றியமையாப் பண்புகளை இயம்புக.

29. செய்யுள் பாடம் நடத்தும் முறையை விவரிக்க.